## தலைப்பு 224 - இலங்கை வான்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு

---

தலைப்பு 224 - இலங்கை வான்படையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 30 ஆம் திகதி வான்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

வான்படைக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 53,174.50 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 49,525.57 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், வான்படைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 3,648.93 மில்லியன் அதாவது 6.86 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 33,876.50 | 32,281.40 | 1,595.10 | 4.17 |
| மூலதனம் | 19,298.00 | 17,244.17 | 2,053.83 | 10.64 |
| **மொத்தம்** | **53,174.50** | **49,525.59** | **3,648.93** | **6.86** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக வான்படைக்கு ஏனைய 04 அமைச்சுக்கள் மற்றும் 02 படையினரால் கூட்டுமொத்தமாக ரூபா 661.7 மில்லியன் நிதியேற்பாடு அனுப்பப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 578.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 83.5 மில்லியன் அதாவது 12.62 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

வான்படையினால் 2015 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீட்டிற்காக ரூபா 170 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 246.3 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது திருத்தப்பட்ட வருமானத்தில் 44.88 சதவீதத்தை விஞ்சியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | | திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைகள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.16 | 250.00 | 170.00 | 246.31 | 76.3 | 44.88 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

வான்படைக்குரிய 22401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 550.00 | 412.28 | 475.00 | 519.25 | 1,000.00 | 347.99 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

வான்படையின் கீழுள்ள 7002/0000/00/0030/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகள் ரூபா 224.59 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

வான்படையின் கீழ்வரும் 03 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 99.85 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பொது வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0097/000 | 91.12 |
| 6000/0000/00/0002/0065/000 | 0.56 |
| 6000/0000/00/0018/0021/000 | 8.17 |
| மொத்தம் | 99.85 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

இலங்கை வான்படையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

வான்படையினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

மீளாய்வாண்டிற்குரிய 45 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக அந்த செலவின விடயத்தின் கீழ் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் 6 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான வீச்சினைச் கொண்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்குகள்

இலங்கை வான்படையினால் 2016 யூலை 30 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கிற்குரிய மீதி ரூபா 286,036 ஆக இருந்தது. அந்த மீதி 2001 யூலை 06 ஆந் திகதி முதல் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

வான்படையினால் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 12,841,000 தொகையான முத்திரைக் கட்டணம் 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 வருமானக் கணக்குகள்

விமானப்படைத் தளபதி வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.16 இலக்க விமான வாடகையான வருமானக் குறியீடு, வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானக் குறியீட்டிற்குரிய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் சேகரிக்கப்பட வேண்டியிருந்த வருமானம் ரூபா 250.00 மில்லியனாக இருந்தது. பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 170.00 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 246.31 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன்

பிரகாரம் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 76.31 மில்லியனால் அதாவது 44.85 சதவீதத்தால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 13.19 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 16 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து முன் கொண்டுவரப்பட்டிருந்தது. நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(இ) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் 20.03.02.16 என்ற வருமானக் குறியீட்டிற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வான்படைக்காக விமானங்களை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்கின்ற வருமானங்களைச் சேகரிப்பதற்காக அதன் உப கம்பனியான ஹெலிடுவரஸ் நிறுவனத்திற்கு வான்படையின் கணக்காளரினால் வான்படை பயன்படுத்திய பற்றுச்சீட்டு புத்தகங்கள் கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி அக்கம்பனி பயன்படுத்துகின்ற பற்றுச்சீட்டு புத்தகத்தின் மூலம் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானம் வான்படையின் கணக்குப் பிரிவிற்கு அனுப்பி வைப்பதற்கு நீண்ட காலம் எடுத்திருந்தது. மேலும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 5,512,160 தொகை அரசாங்கத்தின் கணக்கொன்றல்லாத பதவிநிலை நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

22401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 347,780,123 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது. நிலுவையான கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஓய்வுபெற்ற, மரணித்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 23,703,310 தொகையான நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

இலங்கை வான்படையின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) சொத்துக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் 04 ஆம் பந்திகளின் பிரகாரமும் 2004 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின்

பிரகாரமும் 2004 சனவரி 01 இல் உள்ளவாறு பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட அசையும் சொத்துக்கள் தொடர்பில் அவற்றின் கிரயம், கொள்வனவு செய்யப்பட்ட திகதி விபரம், தொழில்நுட்ப மாதிரி போன்ற தகவல்கள் 06 மாதங்களுக்கு ஒரு தடவை அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. இலங்கை வான்படையினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு முன்னர் சில கணக்காய்வு சந்தர்ப்பங்களின் போது இது தொடர்பாக வான்படைக்கு அறிவித்திருந்ததுடன் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சொத்துக்கள் தொடர்பாக பூரணமற்ற கணக்குகள் வைக்கப்பட்டமையின் காரணமாக 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு வான்படை தவறியிருந்தது.

(ii) நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் பிரதான பேரேட்டில் சொத்துத் தொகுதி கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிலையான சொத்துப் பட்டியலுடன் பரீட்சிப்பதற்காக அந்த நிகழ்ச்சித் திட்டம் முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

வான்படையினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 2,078,124,158 ஆக இருந்ததுடன் அது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 480,582 தொகை பொறுப்புப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை வான்படைக்காக பாதுகாப்பு அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த விமானம் மற்றும் உதிரிப்பாகங்களுக்காக ரூபா 25,222.33 மில்லியன் வான்படையினால் செலுத்த வேண்டியிருந்த போதிலும், அப்பெறுமதி பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.

(iii) 11 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 444.58 மில்லியனால் விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடு**

6 வங்கிக் கணக்குகளுக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 1,363,176 பெறுமதியான 36 காசோலைகள் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

வான்படையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வான்படைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்றின் 56 உதிரிப்பாகங்கள் சேவை வழங்கலுக்காக கையளிப்பதற்கு கழற்றி அகற்றப்பட்டிருந்ததுடன் அவற்றை மீண்டும்

பொருத்தாது ஜீப்வண்டி மீண்டும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக தனியார் கம்பனியொன்றிற்கு 2015 யூன் 06 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இந்த உதிரிப்பாகங்கள் காணப்படாமையின் காரணமாக 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. கழற்றி அகற்றப்பட்ட 56 உதிரிப்பாகங்களில் 36 உதிரிப்பாகங்கள் சந்தைப்பெறுமதி 2016 பெப்ரவரி 11 இல் உள்ளவாறு ரூபா 330,690 ஆக இருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இந்த உதிரிப்பாகங்கள் தொடர்பாக மேலதிக பரிசோதனைகளை நடாத்தி அதன் நட்டம் வான்படையினால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை வான்படையினால் பதவிநிலை நலன்புரி நிதியத்திலிருந்து ரூபா 8,799,701 தொகை செலவில் அந்த செலவினங்களை மீளளிப்புச் செய்யும் போது வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட பட்டியல்கள் மற்றும் ஏனைய ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நலன்புரி நிதியத்தினால் வழங்கப்பட்ட உறுதிச்சீட்டு மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதனால் மேற்கூறப்பட்ட செலவினங்களுக்குரியவைகள் மற்றும் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(இ) யுத்த ரீதியற்ற வான் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் வான்படையின் பிரதான பணியாக இருந்த போதிலும், உப கம்பனியான ஹெலிடுவர்ஸ் தனியார் கம்பனி மூலம் அந்த செயல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக அது தொடர்பான அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் வருமானத்தைச் சேகரித்தல் தொடர்பாக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க அக்கம்பனி செயற்படாமை கம்பனியின் வங்கிக் கணக்குகளும் ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை போன்ற விடயங்களினால் உரிய செயற்பாடுகளும் தொடர்பாக போதியளவான உரிய செயற்பாடுகள் தொடர்பாக போதியளவான கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஈ) வான்படைத் தலைமையகம், பல்வேறு முகாம்கள் மற்றும் பிரிவுகளில் 96 உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந் நிதியங்களின் செயல்நடவடிக்கைகளுக்காக வான்படைக்குச் சொந்தமான பௌதீக மற்றும் மனிதவளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக கோரப்பட்டிருந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. 2016 யூன் 24 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் போது மேற்கூறப்பட்ட நிதியம் கணக்காய்விற்கு இணங்கும் வகையில் தொடர்ந்தும் நடாத்தப்பட வேண்டிய முறை தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று மாதமொன்றிற்குள் செயற்குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அக்கட்டளையின் பிரகாரம் வான்படை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வான்படையினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

இலங்கை வான்படையினால் மோட்டார் வாகனங்களை வாடகைக்குப் பெறும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4, 5.4.8 மற்றும் 6.2.2 ஆம் வழிகாட்டல்களுக்கு முரணாக, வாகனமொன்றிற்கு மாதத்திற்கு ரூபா 50,000 வீதமான வாடகைத் தொகையில் 102 வாகனங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது முற்பணமாக ரூபா 61,150,000 செலுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

வான்படையினால் 4 ஹெலிகெப்டர்களை பழுதுபார்ப்பதற்காக ஆறு நிறுவனங்களிலிருந்து கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக கேள்வி கோரப்படாதிருந்த நிறுவனமொன்றிலிருந்தும் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மொத்தப் பெறுமதி ரூபா 450 மில்லியன் ஐ விஞ்சியிருந்தமையால் அந்த கொள்வனவுகள் அமைச்சரவை நியமித்த பெறுகைகள் குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாது அது மீறப்பட்டு அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் ஆகக் குறைந்த கேள்வியை விட ரூபா 80.38 மில்லியன் அதிகரித்து கூறுவிலை சமர்ப்பித்த வியட்னாமின் கம்பனியொன்றிற்கு ரூபா 30.21 மில்லியன் பெறுமதியான நவீனமயப்படுத்தும் இரண்டு பிரிவுகள் அகற்றப்பட்டு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 90 நாட்கள் முதல் 120 நாட்கள் வரையிலான காலத்தில் இந்த பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு கையளிக்க வேண்டியிருந்தது. இருந்த போதிலும், அத்திகதிக்கு முன்னர் கையளிக்கப்படாதிருந்த போதும் அதற்காக ரூபா 11.11 மில்லியன் தொகையான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 நட்டமும் இழப்பும்

72 சம்வபங்கள் தொடர்பாக 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 27.64 மில்லியன் கூட்டுத்தொகையான இழப்புக்களையும் நட்டங்களையும் அறவிடுவதற்கு பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு இலங்கை வான்படை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை வான்படையினால் 2009 ஆம் ஆண்டின்போது இரண்டு தனியார் கம்பனியிலிருந்து ரூபா 19.96 மில்லியன் கூட்டுப்பெறுமதியான 187 சூரிய சக்தி வீதி விளக்குகள், 15 வருட உத்தரவாதக் காலத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்கு 2009 மே மாதத்தின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் போது பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகளுக்கும், மின்கலங்களுக்கும் இடையே ரூபா 16.02 மில்லியன் பெறுமதியான 148 வீதி விளக்குகளும் 33 மின்கலங்களும் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதியளவில் செயலிழந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 07 | 04 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 193 | 95 | 98 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | 2,868 | 2,562 | 306 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) சேவைப்பிரிவு | 440 | 173 | 267 |
| | ---------------------------- | | | |
| (vi) | உத்தியோகத்தர்கள் | 2,156 | 1,819 | 337 |
| (vii) | படையினர் | 35,844 | 34,555 | 1,289 |
| | | ------------ | ------------ | ------------- |
| | மொத்தம் | 41,513 | 39,211 | 2,302 |
| | | ======= | ======= | ======= |

இலங்கை வான்படையின் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் பதவிகளின் எண்ணிக்கை 6 ஆக இருந்த போதிலும் 04 பேர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். நிதிப்பணிப்பாளர் அலுவலகத்தில் முகாமைத்துவ சேவையில் 8 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக தொழிலாளர் தரத்தில் 9 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்